## 13

# ஆவிக்குரிய வரங்கள் பற்றிய உண்மைகள் தேவைப்பட்ட ஒரு சபை

## (1 கொரிந்தியர் 12:1–13:13)

ஆவிக்குரிய வரங்கள் பற்றிய பவுலின் கலந்துரையாடல், 1 கொரிந்தியர் 12ல் தொடங்கி 14ம் அதிகாரம் வரையிலும் தொடருகிறது. "அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்கிற எனக்கு மனதில்லை" (12:1) என்று கூறுவதன் மூலம் இந்தத் தலைப்பை அப்போஸ்தலர் அறிமுகப்படுத்தினார்.[1] பின்பு அவர், ஆவிக்குரிய இந்த வரங்களைப் பற்றி நீளமாகப் பேசக் கடந்து சென்றார்.

இவ்வசனப் பகுதியில் பவுல் பட்டியலிட்ட ஆவியின் வரங்கள், முதல் நூற்றாண்டு சபையின் பாகமாயிருந்த அற்புத வரங்களாகும், ஆனால் இவைகள் இன்றைய நாட்களின் சபையின் பாகமாக இருப்பதில்லை. இருந்தபோதிலும், இந்த அதிகாரங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக 12 மற்றும் 13 ஆகிய அதிகாரங்கள், ஆவிக்குரிய வரங்கள் பற்றிய முக்கியமான பல உண்மைகளை முன்வைக்கின்றன.

### பரிசுத்த ஆவியானவரே அவர்களின் ஆவிக்குரிய வரங்களுக்கு ஆதாரமூலமாக இருந்தார்

எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுள்ளனர் என்று உறுதிப்படுத்துவதன் மூலம் [இந்தக் கலந்துரையாடலைப்] பவுல் தொடங்கினார்:

> நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே. ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன் (12:2, 3).

விசுவாசிகளை அவிசுவாசகளிடமிருந்து வித்தியாசப்படுத்துவது எது? கிறிஸ்தவர்கள் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கையிடுகின்றனர் (ரோமர் 10:9); மற்றவர்கள் இவ்வாறு அறிக்கையிடுவது இல்லை. பரிசுத்த ஆவியானவரால் அன்றி கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட அறிக்கையை இட இயலாது

*(வசனம் 3). ஆகையால் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.*

*ஒரு கிறிஸ்தவரின் மனவிருப்பத்திற்கு எதிராகப் பரிசுத்த ஆவியானவர் அவரது வாயை மேற்கொண்டு எடுத்து அவரை "இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்" என்று கூறச் செய்வதில்லை. மாறாக, பரிசுத்த ஆவியானவரின் செல்வாக்கின் மூலமாக (பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட வசனத்தைப் பிரசங்கித்தல் மூலமாக), ஒரு நபர் இயேசுவை ஆண்டவர் என்று அறிய வருகிறார், பின்பு அந்த விசுவாசத்தை அவர் அறிக்கை செய்கிறார்.*

*நாம் கிறிஸ்துவை ஆண்டவர் என்று அறிக்கை செய்வதால் நாம் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டிருக்கிறோம் என்பதே பவுல் எற்படுத்திய கருத்தாக இருந்தது. உண்மையில் எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுள்ளனர் என்றே புதிய ஏற்பாடு போதிக்கிறது (காண்க நடபடிகள் 2:38; 5:32; 1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 4:6).*

*எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுள்ளனர் என்ற கருத்தை ஏற்படுத்திய பின்பு பவுல், கொரிந்தியர்களுக்கு ஆவிக்குரிய வரங்கள் பரிசுத்த ஆவியானவரிடம் இருந்தே வந்தன என்று 12:4-11ல் வலியுறுத்தினார். கொரிந்தியர்களுக்கு அவர்களின் ஆவிக்குரிய வரங்களைப் பரிசுத்த ஆவியானவரே கொடுத்திருந்தார் என்று பவுல் கூறியிருந்தாலும் (12:7-11), அவர் "ஆண்டவர்" - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் இயேசு கிறிஸ்து - மற்றும் "தேவன்" ஆகியோரும் அந்த வரங்களின் ஆதாரமூலமாக இருக்கின்றனர் என்ற வகையிலும் குறிப்பிட்டார் (12:5, 6).*

*அற்புத வரங்களைப் பற்றிப் பவுல் கலந்துரையாடுகையில், அவர் கூறியது நமது "வரங்கள்" அல்லது தாலந்துகளுக்கும் உண்மையானதாக உள்ளது. அவைகள் யாவும் தேவனிடத்தில் இருந்து வருகின்றன. நமது திறன்கள் தேவனிடத்தில் இருந்து வருகின்றன, அவைகள் ஈட்டப்பட்டவை அல்ல என்று நாம் உணர்ந்தறிந்த நிலையானது பின்வரும் மூன்று செயல்விளைவுகளைக் கொண்டிருக்க வேண்டும்: (அ) நாம் மேட்டிமை கொள்வதில் இருந்து நம்மைக் காத்தல், (ஆ) சுயநலத்தில் இருந்து நம்மைக் காத்தல் மற்றும் (இ) நாம் செய்யும்படி அவர் வல்லமை அளித்துள்ளது தேவனுக்கு நன்றி கூறக் காரணமாகுதல்.*

## *பரிசுத்த ஆவியானவர் பல்வேறு வரங்களை அளித்தார்*

*ஆவிக்குரிய வரங்களின் முதல் பட்டியல் 1 கொரிந்தியர் 12:8-10ல் உள்ளது. ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரங்கள், அற்புதங்களைச் செய்யும் சக்தி, தீர்க்கதரிசனம் உரைத்தல், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதல், பற்பல பாஷைகளைப் பேசுதல், மற்றும் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல். வரங்களின் இன்னொரு பட்டியலை நாம் 12:27-31ல் காண்கிறோம்.*

*அவ்வாறே, இன்றைய நாட்களில் சபையில் தேவன் பலருக்கு வெவ்வேறு தாலந்துகளைத் தந்திருக்கிறார். தேவனுடைய பிள்ளைகள் அவரது இராஜ்யத்தில் பயன்படுத்த முடிகிற பல தாலந்துகளை உணர்ந்தறியத் தவறுதல் என்பது சபையில் இன்று மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது. பிரசங்கியார்*

என்ற வகையில் இணங்கச் செய்தலின் வரத்தையும் மூப்பர் என்ற வகையில் நடத்துவத்துவத்தின் வரத்தையும் ஒருவர் பயன்படுத்த முடியும். இருப்பினும், இராஜ்யத்தில் - குழாய் அமைப்பு அல்லது மின் இணைப்புப் பணிசெய்தல், சமையல் செய்தல் அல்லது தைத்தல், கவனித்தல் மற்றும் ஊக்குவித்தல் போன்ற - வரங்களும் பயன்படுத்தப்பட முடியும். நமது திறன்கள்யாவும் தேவனுடைய ஊழியத்தில் பயன்படுத்தப் படுவதற்காக அவரால் தரப்பட்டுள்ளன.

## இந்த வரங்கள் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பொதுவான நன்மைக்காகத் தரப்பட்டன

பவுல், ''ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது'' [a spiritual gift] என்று கூறினார் (12:7). சபை ஆசீர்வதிக்கப்படக் கூடும்படிக்குத் தேவன் தாலந்துகளைத் தருகிறார். நமது திறன்கள் நமது சுய மேம்பாட்டிற்காக மாத்திரம் பயன்படுத்தப்படக் கூடாது, ஆனால் "பொதுவான நன்மைக்காக" பயன் படுத்தப் படவேண்டும்.

இன்றைய நாட்களில் நமது தாலந்துகள் "பொதுவான நன்மையை" எவ்வாறு மேம்படுத்துகின்றன? உடலின் பொதுவான ஆரோக்கியத்தை பௌதீக உடலின் உறுப்புகள் மேம்படுத்தும் அதே வழியிலேயே. பவுல் பின்வருமாறு எழுதினார்:

> எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு,[2] எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்[3] (12:12, 13).

மனித உடல் ஒன்றாகவே உள்ளது - ஆனால் அது பல உறுப்புகளைக் கொண்டுள்ளது, மற்றும் அவை ஒவ்வொன்றும் தனது சொந்தப் பணியைக் கொண்டுள்ளது. அவ்வாறே கிறிஸ்துவின் சரீரமும் ஒன்றே, ஆனால் பல உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, அவர்கள் ஒவ்வொருவரும் தமது சொந்தப் பணியைக் கொண்டுள்ளனர். கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் எவ்வாறு தேவைப்படுகிறோம் என்பதைப் பற்றி நாம் மிகச்சரியாக அறிந்திருக்க வேண்டும். பௌதீக உடலானது ஒரு உறுப்பு இல்லாதநிலையில் (எடுத்துக் காட்டாக, ஒரு கையை இழந்த பின்பு) பணிசெய்வதில் சிரமம் கொண்டுள்ளது என்றால், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள உறுப்பினர்களில் ஒருவர் தமக்குத் தேவன் கொடுத்துள்ள திறனைப் பயன்படுத்தாது இருந்தால், அந்த சரீரம் [சபை] எவ்வாறு மலர்ந்து செழிக்க முடியும்?

# ஒவ்வொரு வரமும் முக்கியமானதாக, பயன்நிறைந்ததாக, மற்றும் அத்தியாவசியமானதாக இருந்தது

*சரீரத்தின் விவரிப்பு 12:14-24ல் விரிவாக்கப் பட்டுள்ளது. 15 முதல் 19 வரையிலான வசனங்களில், கொரிந்தியர்கள் தங்கள் வரங்களைப் பயனற்றதாக்கக் கூடாது என்று பவுல் போதித்தார். சிலர், "சகோதரர் ஜான் கொண்டுள்ள வரத்தை நான் பெற்றிருப்பதில்லை என்ற காரணத்தினால், நான் விளைவற்றவனாக இருக்கிறேன். நான் மதிப்பற்றவன் என்று என்னைப் பற்றி மக்கள் நினைக்கின்றனர். ஆகையால் நான் எனது தாலந்தைப் பயன்படுத்த மாட்டேன்" என்று கூறினர் என்பது தெளிவு. செயல்விளைவில், "எல்லாரும் எல்லா வரங்களையும் பெற்றிருக்க முடியாது" என்பதே பவுலின் பதிலுரையாக உள்ளது.*

*பின்பு 20 முதல் 24 வரையில் உள்ள வசனங்களில் பவுல், எவரொருவரின் வரத்தையும் மற்ற சகோதரர்கள் பழித்துரைக்கலாகாது என்று போதித்தார். கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களில் சிலர், தாங்கள் மேன்மையான வரங்களைக் கொண்டிருந்ததாக நினைத்து, மற்றவர்கள் கொண்டிருந்த வரங்கள் கீழானவை என்பது போல அவர்களைக் கீழ்மையாகக் கண்ணோக்கினர் என்பது தெளிவு. அவர்களின் எண்ணப்போக்குகள், "நீங்கள் எங்களுக்குத் தேவையில்லை" என்று மறைமுகமாக உணர்த்தின. மனித உடலைப் பயன்படுத்தி இன்னும் இரண்டு விவரிப்புகளைக் கொண்டு பவுல் பதில் உரைத்தார்.*

*முதலாவது அவர், "பலவீனமான" அல்லது "கனத்தில் குறைந்த" பாகங்களே அதிக அவசியமானவைகளாக உள்ளன மற்றும் அவைகள் மாபெரும் கனத்துடன் நடத்தப் படுகின்றன (12:22-25) என்று கூறினார். அடுத்ததாக அவர், சரீரத்தின் உறுப்புகள் ஒன்று மற்றொன்றை "உணரும்" வகையில் மிகவும் நெருக்கமாக உறவுபட்டுள்ளன என்று கூறினார் "ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும்கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும்கூடச் சந்தோஷப்படும்" (12:26). மனித உடலைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போம்: யாரேனும் ஒருவருடைய கணுக்காலில் சுளுக்கு ஏற்பட்டு இருந்தால், அவரது முழு உடலுமே பாதிக்கப்படுகிறது. உடலின் ஒவ்வொரு உறுப்பும் அந்தப் புண்படுதலுக்கு ஏற்பத் தன்னைச் சரிசெய்து கொள்கிறது; ஒவ்வொரு உறுப்பும் பாதிக்கப்பட்ட உறுப்பிற்காக "உணர்வை" அடைகிறது.*

*கிறிஸ்துவின் ஒரே சரீரத்தின் உறுப்பு என்ற வகையில் நாம், நமது சொந்த வரங்களில் அகம் மகிழ்ந்து அந்த சரீரத்தின் நன்மைக்காகத் தேவனுடைய ஊழியத்தில் அந்த வரங்களைப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றவர்கள் பெற்றுள்ள வரங்களிலும் - அவற்றை நாம் நமது சொந்த வரங்களைக் காட்டிலும் உயர்வானவைகளாக அல்லது தாழ்வானவைகளாக, எவ்வாறு கருதினாலும் - நாம் அகம் மகிழ வேண்டும் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகள் தாங்கள் பெற்றுக்கொண்ட வரம் எதுவாயிருப்பினும் அவற்றை சபையின் நன்மைக்காகப் பயன்படுத்தும்படி அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.*

# அவர்கள் பெற்றிருந்த வரங்கள் அவர்களை ஒருமைப்படுத்துவதற்காக இருந்தன மற்றும் அவர்களைப் பிரிப்பதற்காக அல்ல

*மனித உடல் பற்றிய தமது உதாரணத்தைப் பவுல், 12:25, 26ல் தொடர்ந்தார். உடலில் பல்வகைத் திறன்களுடன், அதன் ஐக்கியம் என்பதே மற்ற வசனங்களில் திறவுகோல் ஆய்வுக்கருத்தாக உள்ளது:*

> *எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு ... (12:12, 13அ; மேலும் காண்க 12:20).*

*கொரிந்தியர்கள் பிரிவினைக்கு ஆளாக இருந்தனர். இந்தப் பிரச்சனையானது, ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய அவர்களின் எண்ணப்போக்கைப் பாதித்தது; அவர்கள் எந்த வரம் மிகவும் முக்கியமானது என்பதைப் பற்றிப் பிரிவினை கொண்டிருந்தனர் மற்றும் சில வரங்கள் அவசியமற்று இருந்தன என்ற தவறான எண்ணப்போக்கைக் கொண்டிருந்தனர். நாமும்கூட சபையில் நமது பணிப்பொறுப்புகள் பற்றிய கருத்துக்களில் பிரிவினை கொண்டிருக்கக் கூடும். யார் பெரிய வரம் கொண்டுள்ளார் என்பது பற்றி நாம் விவாதிக்கக் கூடும். "யார் மிகச்சிறப்பாகப் பாடலை வழிநடத்துகிறார்?" அல்லது "யார் மிகவும் செயல் விளைவுள்ள போதகராக இருக்கிறார்?" என்பது போன்ற கேள்விகள் நம்மைப் பிரிக்கக் கூடும். சிலர், "எனது வரங்கள் உணர்ந்தறியப்பட்டு பயன்படுத்தப் படாவிட்டால், நான் சபையை விட்டு வெளியேறி விடுவேன்" என்று கூறலாம்.*

*கொரிந்தியர்கள் உதாரணத்தைப் பின்பற்றுவதை நாம் தவிர்க்க வேண்டும் என்பது தெளிவு. செயல்படும் மனித உடல் ஒன்றை நாம் கற்பனையில் சித்தரித்துக் கொள்வோம், அதன் ஒவ்வொரு உறுப்பும் ஒரே நோக்கத்தை நிறைவேற்ற ஒத்துழைக்கின்றன, மற்றும் சபை செயல்பட உதவுவதும் இவ்வாறே உள்ளது.*

***மனித உடலின் உறுப்புகள் ஒன்றிணைந்து செயல்படுகின்றன***

*ஒரு ஓட்டப் பந்தயத்தில் ஓடுபவரைக் கவனித்தல் என்பது ஒரு நல்ல விவரிப்பாக உள்ளது. அவரது கால்களும் அவரது பாதங்களும் இந்தச் செயலில் முக்கியமானவையாக உள்ளன என்பது தெளிவு - ஆனால் அதுவே எல்லாமும் ஆகி விடுவதில்லை! அவரது சமான நிலையைக் காத்துக்கொள்ள அவரது கைகள் வீசுகின்றன, அவரது இருதயம் வேகமாகத் துடிக்கிறது மற்றும் அவரது நுரையீரல்கள் கடினமாக வேலை செய்கின்றன. மற்றும் அவரது மூளை இச்செயலில் ஈடுபட வில்லை என்றால் - அவரது கால்கள், பாதங்கள், கைகள், இருதயம் மற்றும் நுரையீரல் ஆகியவற்றிற்கு அவைகள் என்ன செய்ய வேண்டும் என்று கூறவில்லை என்றால் - அவர் ஓட இயலாதவராக இருப்பார். அவர் ஓடுதலைச் சாத்தியமாக்குவதில், உண்மையில் அவரது உடலின் ஒவ்வொரு பகுதியும் ஈடுபடுகின்றன.*

**கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஊழியம் செய்கின்றனர்**

*அவ்வாறே, முழு சரீரத்தின் உதவியின்றி சபையில் எந்த நன்மையும் நிறைவேற்றப் படமுடியாது. பல உறுப்பினர்கள் தங்கள் திறன்களை சபையின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். ஒரு ஞாயிற்றுக்கிழமை காலைப்பொழுதில் ஒரு இளைஞர் ஞானஸ்நானம் பெறுகிறபோது, தேவன் அந்த விளைச்சலைக் கொடுப்பதை நாம் காண முடியும். இருப்பினும் மனிதக் கண்ணோக்கக் கருத்தில் இருந்து பார்க்கையில், அந்த நபரின் ஆத்துமாவை இரட்சிப்பதில் பங்கேற்றுள்ள உழைப்பாளர்கள் யார்? ஒருவேளை பிரசங்கியார் சுவிசேஷ செய்தியை முன்வைத்து அந்த நபர் இயேசுவினிடத்தில் வரும்படியான இயேசுவின் அழைப்பை அளித்த வகையில் அவரது இருதயத்தைத் தொட்டிருக்கலாம். கிறிஸ்து, இரட்சிப்பு மற்றும் பரலோகம் ஆகியவற்றைப் பற்றி சபைக்குழுமத்தைப் பாடலில் வழிநடத்தியவர் அந்த இளைஞரின் தீர்மானத்தில் பங்கு பெற்றிருக்கலாம். அவருக்கு முன்பாகக் கிறிஸ்தவ வாழ்வை நடத்திய அவரது நண்பர்களில் சிலர், அவர் கிறிஸ்தவராக விரும்புவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். வேதாகம வகுப்புகளிலும் ஆராதனை ஊழியங்களிலும் நட்புறவையும் ஏற்றுக்கொள்ளுதலையும் அவர் அனுபவித்தாரா? சபைக்குழுமத்தில் உள்ள யாரேனும் தனிப்பட்ட வகையில் அவருக்குப் போதித்து சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்படி அவரை ஊக்குவித்தாரா? சபைக் கட்டிடம் நேர்த்தியாக இருக்கும்படி பாதுகாத்தவர்கள், இளைஞர் ஐக்கியங்களைத் திட்டமிட்டவர்கள் அல்லது கைப்பிரதிகள் கிடைக்கும்படி செய்தவர்கள் அவரது தீர்மானத்தில் ஒரு பங்குப் பணியைக் கொண்டிருக்கச் சாத்தியம் உள்ளது. ஒருவர் தேவனுடைய பிள்ளையாகும்போது, அது கிறிஸ்துவின் ஊழியத்தில் பல கிறிஸ்தவர்கள் தங்கள் திறன்களைப் பயன்படுத்தியதால் ஏற்படச் சாத்தியம் இருக்கலாம்.*

## அவர்களின் ஆவிக்குரிய வரங்கள் அன்பைப் போன்று அவ்வளவு முக்கியமானவையாக இருக்கவில்லை

*12ம் அதிகாரத்தின் முடிவில் நாம் "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று வாசிக்கிறோம் (12:31ஆ). "இன்னும் அதிக மேன்மையான வழி" என்பது 13ம் அதிகாரத்தில் பவுல் விவரித்த அன்பின் வழியாக உள்ளது.*

**அன்பு என்பது நீடித்து இருப்பதால் மிகவும் மேன்மையானதாக உள்ளது**

*அன்பின் வழி மிகவும் மேன்மையானதாக இருப்பது ஏன்? ஏனென்றால் பவுல் கூறிய ஆவிக்குரிய வரங்கள் பகுதியானவையாகவும் பூரணமற்றவையாகவும் கடந்து செல்பவையாகவும் இருந்தன (13:8-10). அவைகள் சபையின் பிள்ளைப் பிராயம் போன்றவையாக இருந்தன; சபையானது பக்குவம் அடைந்தபோது அல்லது முழுமையாக வளர்ச்சி பெற்றபோது, அதற்கு அவைகள் இனியும் தேவைப்பட மாட்டாது (13:10, 11). சபையின் முழுப்பக்குவம் எப்போது வர இருந்தது? தேவனுடைய சித்தம் பற்றிய வெளிப்படுத்துதல் முழுமையானபோது - அதாவது புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்பட்ட போது - முழுப்பக்குவம் வர இருந்தது. பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்கள் முதல் நூற்றாண்டு சபைக்குத்*

தேவைப்பட்டிருந்தன; ஆனால் சபையானது பக்குவம் அடைந்தபோது அல்லது நிறைவடைந்த போது, அற்புத வரங்கள் இல்லாது ஒழிந்தன. அந்த வரங்களுக்கு நேர் எதிராக, அன்பு என்பது காலத்தின் முடிவு வரையிலும் தொடரும் (13:13).

**அன்பில் உள்ளடங்கியுள்ளவற்றின் காரணமாக அது மிகவும் மேன்மையானதாக இருக்கிறது**

இன்னொரு காரணத்தினால் அன்பு என்பது மிகவும் மேன்மையான வழியாக உள்ளது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த ஆவிக்குரிய வரங்கள் அவர்களைப் பிரித்து வைத்தன; இதற்கு நேர்மாறாக, அன்பு என்பது அவர்களை ஒன்றிணைக்க முடியும். கொரிந்து நகரில் இருந்த சீஷர்கள் 4 முதல் 8 வரையிலான வசனங்களில் விவரிக்கப் பட்டுள்ளபடி அன்பைப் பற்றிக் கற்றுக்கொள்வது அவசியமாக இருந்தது. அவர்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டி இருந்தது:

ஒருவர் மற்றவரிடம் சாந்தமாகவும்
ஒருவர் மற்றவரிடம் தயவாகவும் இருக்க வேண்டும்;
ஒருவர் மற்றவரிடம் வரங்கள் பற்றி பொறாமைப்படுவதை நிறுத்த வேண்டும்;
ஒருவர் சொந்த வரங்கள் பற்றி இறுமாப்புக் கொள்வதை நிறுத்த வேண்டும்;
ஒருவர் மற்றவரைக் கண்ணியத்துடன் நடத்த வேண்டும்; சுயநலமற்று இருக்க வேண்டும்;
ஒருவர் மற்றவரிடம் சினமடைவதைத் தவிர்க்க வேண்டும்;
ஒருவர் மற்றவரைத் தாங்க வேண்டும் மற்றும் தங்கள் சகோதரர் யாவராலும் செய்யப்படும் நன்மையில் சந்தோஷப்பட வேண்டும்,

இந்த வழியில் அவர்கள் ஒருவர் மற்றவர்மீது அன்புகூர்ந்தால், ஆவிக்குரிய வரங்கள் குறித்து அவர்கள் கொண்டிருந்த பிரச்சனைகள் மறைந்து போகும்.

அன்பு இல்லாமல் செய்யப்படும் எந்த ஒரு செயலும் எந்த மதிப்பையும் கொண்டிருப்பதில்லை என்று கூறியதன் மூலம் பவுல் அன்பின் மதிப்பை வலியுறுத்தினார். அன்பு இல்லையேல், பல மொழிகளில் பேசுதல் மதிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை, அன்பு இல்லையேல் தீர்க்கதரிசன வரங்களும் புரிந்துகொள்ளும் மற்றும் அறிவின் வரங்களும் மற்றும் விசுவாச வரமும் பயனற்றவையாக இருக்கும். அன்பை இழந்து செய்யப்படும் உபகாரமும் கூட அர்த்தமற்றதாகவே இருக்கும் (13:1-3).

பவுல் பேசிக்கொண்டிருந்த இந்த அன்பு என்பது என்னவாக இருந்தது? அது agape என்ற அன்பாக உள்ளது - இந்த அன்பு மற்றவருக்கு மிகச்சிறந்தவற்றையே விருப்பம் கொள்கிறது மற்றும் அன்புகூரப்பட்டவர்களுக்கு இது மிகச்சிறந்ததைச் செய்கிறது. அடிப்படையில் அன்பு என்பது மற்ற மக்களை சரியாக நடத்துதலாக உள்ளது. தாலந்து பெற்ற, வேதபக்தியுள்ள, உபகார சிந்தையுள்ள மனிதர் அன்புடன் நடந்துகொள்ளாவிட்டால் - எடுத்துக்காட்டாக அவர் மற்றவர்களுக்கு உதவி செய்கையில் பொறுமையாக, தயவாக மற்றும் சுயநலமற்று இல்லாவிட்டால் - அவர் ஒன்றுமில்லை.

***மற்றவர்களை நாம் அன்புடன் நடத்தாவிட்டால் நமது "வரங்கள்" அல்லது தாலந்துகள் அர்த்தமற்றவையாக உள்ளன***

*அற்புத வரங்கள் கொண்டிராத நமக்கு இங்குள்ள செய்தி என்ன? கொரிந்தியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தரப்பட்ட அதே பாடத்தை நாமும் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவர் - திறமையாகப் பேசக்கூடிய, அழகாகப் பாடக்கூடிய அல்லது பெருந்தன்மையுடன் கொடுக்கக் கூடிய என்பது போன்ற - எத்தனை தாலந்துகள் கொண்டிருந்தாலும், அவர் அன்பு கொண்டிராது இருந்தால், அவரது திறன்கள் தேவனை மகிமைப்படுத்துவதில்லை அல்லது சபையைக் கட்டி எழுப்புவது இல்லை. அவர் மற்றவர்களை நடத்துதலில் தயவு, பொறுமை மற்றும் சுயநலமின்மை ஆகியவற்றைக் கொண்டிராதிருந்தால், அவரது திறன்கள் யாவையும் அர்த்தமற்றவையாக உள்ளன. இன்றைய நாட்களில் நமது தாலந்துகளைக் கொண்டிருத்தலும் பயன்படுத்துதலும், நம்மீது நாம் அன்புகூருவது போன்று நமது அயலாரையும் அன்புகூருதல் போன்று அவ்வளவு முக்கியமானவையாக இருப்பதில்லை.*

## முடிவுரை

*இவ்வசனப்பகுதி கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுலின் அறிவுறுத்துதல் என்பதாக மாத்திரம் இருப்பதில்லை. இது இன்றைய நாட்களில் நமக்கு - ஒட்டு மொத்தமாக சபைக்கு மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் - செய்தியைக் கொண்டுள்ளது.*

*சபை நடத்துனர்கள், உறுப்பினர்களின் திறன்களைக் கண்டறிந்து ஒவ்வொரு உறுப்பினரையும் ஊழியம் செய்ய வைக்க முயற்சி செய்ய வேண்டும் என்பது சபைக்கான செய்தியாக உள்ளது. கிறிஸ்தவர்களில், சபைக்குழுமத்தின் "பொதுவான நன்மைக்காக" சரீரத்தில் (சபையில்) தங்கள் தாலந்துகளைப் பயன்படுத்துவதில் பணி மும்முரமாக இருப்பவர்கள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்கச் சாத்தியம் உள்ளது. செயல் துடிப்புள்ள, ஊழியம் செய்யும் உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்கள்மீது முறையிடுதல் சாத்தியமில்லை. உறுப்பினர்களை ஊழியத்தில் ஈடுபடுத்தும் சபைக்குழுமங்கள் ஒரு சில பிரச்சனைகளையே கொண்டிருக்கும் மற்றும் அது வளருவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.*

*தனிநபரான கிறிஸ்தவருக்கு, நாம் ஒவ்வொருவரும் வரம் அல்லது தாலந்தைக் கொண்டிருக்கிறோம் என்பதே செய்தியாக உள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் தமது சொந்தத் தாலந்துகளைக் கண்டறிந்து அவற்றை தேவனுடைய மகிமைக்காகவும் சபை வளர உதவியாகவும் பயன்படுத்த வேண்டும்.*

---

*குறிப்புகள்*

*[1]"அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து" என்ற பவுலின் வார்த்தைகள், அவருக்குக் கொரிந்தியர்கள் எழுதியிருந்த கேள்விகளின் பாடக்கருத்துக்களில் ஒன்றாக இருந்தது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது (காண்க 1 கொரிந்தியர் 7:1). ஒருவேளை அவர்கள் அவரிடத்தில், எந்த வரம் மிகச்சிறப்பானது என்பது பற்றிய விவாதத்தைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கலாம்.*

*“வரங்கள்” என்பதற்கான* (*charismata என்ற*) *கிரேக்க வார்த்தை “கிருபை”* (*charis*) *என்ற வார்த்தையுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. Charismata* “charismatic” *என்ற வார்த்தையில் இருந்துதான்* “charismatic” *என்ற ஆங்கில வார்த்தை தரவழைக்கப் பட்டுள்ளது.* [2]NRSV*வேதாகமம் மற்றும் சில பதிப்புகள் ஆகியவை, “ஒரே ஆவிக்குள்ளாக நாம் யாவரும் ஞானஸ்நானம் பெற்றோம். ...” என்ற மொழிபெயர்ப்பைத் தருகின்றன. இவற்றின் அர்த்தத்தில் சிறிதளவே வேறுபாடு உள்ளது அல்லது வேறுபாடே இருப்பதில்லை.* [3]*இவ்வசனப்பகுதி, சரீரத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுவதுடன், ஒரே சரீரம் அல்லது சபைதான் உள்ளது என்றும் காண்பிக்கிறது (எபேசியர் 1:22, 23; கொலோசேயர் 1:18); ஞானஸ்நானம் நம்மை அந்த ஒரே சரீரத்திற்குள் அல்லது சபைக்குள் வைக்கிறது; மற்றும் ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட உள்ளடங்குகிறார் (யோவான் 3:5; தீத்து 3:5 ஆகியவற்றை ஒப்பிடவும்). சிலருடைய நம்பிக்கைக்கு நேரெதிராக, பவுல் இவ்விடத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை அல்ல, ஆனால் எல்லா மக்களையும் கிறிஸ்துவுக்குள் வைக்கும் “ஒரே ஞானஸ்நானத்தை” (எபேசியர் 4:5) பற்றிக் குறிப்பிட்டார்.* (Jimmy Allen, *Survey of First Corinthians* [Searcy, Ark.: By the Author, 1975], 154-55.)

# 1 கொரிந்தியர் 12ல் உள்ள ஆவிக்குரிய வரங்கள்

*வேதபாடப் பகுதி: 1 கொரிந்தியர் 12:8-10, 28.*

1 கொரிந்தியர் 12:8-10 மற்றும் 12:28 ஆகிய வசனப் பகுதிகளில் காணப்படும் ஆவிக்குரிய வரங்களின் இரண்டு பட்டியல்கள், அனேகமாக முடிவானவைகளாக இருத்தலை, நோக்கங் கொள்ளாது இருக்கலாம். எபேசியர் 4:11 மற்றும் ரோமர் 12:6-8 (மேலும் காண்க 1 பேதுரு 4:10, 11 மற்றும் மாற்கு 16:17, 18) ஆகியவற்றில் வரங்களின் மற்ற பட்டியல்கள் காணப்படுகின்றன. முதல் பட்டியலில், பிறமொழிகளில் பேசுதல் தொடர்பான வரங்கள் கடைசியில் உள்ளன என்பதைத் தவிர, வரங்கள் கூறப்பட்டுள்ள வரிசை முறைமை முக்கியமற்றதாகக் காணப்படுகிறது. கொரிந்தியர்கள் பிறமொழிகளில் பேசுதலை எல்லாவற்றிற்கும் மேலானதாக மதித்திருந்ததாகக் காணப்படுவதால், இது கவனிக்கத் தக்கதாக உள்ளது. இரண்டாவது பட்டியலில், வரிசை முறைமைக்குப் பவுலினால் சில முக்கியத்துவம் இணைக்கப்பட்டது; ஆனால் மீண்டும், பிறமொழிகளில் பேசுதல் பற்றிய வரங்கள் பட்டியலின் கடைசியில் இடப்பட்டுள்ளன என்பது தனிக்கவனத்திற்கு உரியதாக உள்ளது.[1]

இந்த வரங்கள் உள்ளடக்கியிருந்தது என்ன? பல்வேறு வரங்களில் உள்ளடங்கியிருந்த திறன்கள் ஒன்றின் மேல் ஒன்று கவிந்துள்ளதாகத் தோன்றுகிறது (உதாரணமாக, தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் பெற்றிருந்தவர் அற்புத அறிவின் வரத்தையும் கொண்டிருந்திருக்க வேண்டும்). இருந்த போதிலும் தனித்தனி வரங்கள் என்னவாக இருந்தன என்பது பற்றிய சில ஆலோசனைகள் உதவிநிறைந்தவையாக இருக்கலாம்.

1 கொரிந்தியர் 12:8-10ல் ஆவிக்குரிய ஒன்பது வரங்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன:

1. *ஞானத்தைப் போதிக்கும் வசனம்* (‘‘ஞானத்தை உச்சரித்தல்”; NRSV) - “கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் உள்ள தேவனுடைய ஞானத்தின் செய்தியை விளக்கி உரைக்கும் திறன்.”[2]
2. *அறிவை உணர்த்தும் வசனம்* (“அறிவின் செய்தி”; NIV) - கிறிஸ்தவருக்கு அற்புதமாகக் கொடுக்கப்பட்டு பின்பு அவர் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டியதாக இருந்த தகவல் (காண்க 1 கொரிந்தியர் 14:6).[3]
3. *விசுவாசம்* - அற்புத விசுவாசம், ஒருவரை இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை நிகழ்த்தக் கூடியவராக்கிய வகையிலான விசுவாசம் (மத்தேயு 17:20; 1 கொரிந்தியர் 13:2).
4. *குணமாக்கும் வரங்கள்*[4] - பல்வேறு வியாதிகளைக் குணமாக்கும் வல்லமை.
5. *அற்புதங்களைச் செய்யும் சக்தி*[5] (“அற்புத வல்லமைகள்”; NIV) - இயேசு செய்தது போன்று, குணமாக்குதலுக்கு அப்பால் பல்வேறு வகையான அற்புதங்களை நிகழ்த்தக் கூடிய வல்லமை (காண்க மாற்கு 16:17, 18).[6]
6. *தீர்க்கதரிசனம் உரைத்தல்* - ஏவுதலினால் தேவனுக்காகப் பேசுதல், எதிர்காலத்தைப் பற்றி முன்னுரைத்தல் அல்லது மற்றவர்களுக்குத்

தேவனுடைய செய்தியை எடுத்துரைத்தல்.

7. *ஆவிகளைப் பகுத்தறிதல்* (''ஆவிகளுக்கு இடையில் வித்தியாசப் படுத்தல்''; NIV) - தேவனுக்காகப் பேசுவதாக உரிமை கோருபவர் உண்மையைக் கூறினாரா இல்லையா என்று அறியும் திறன்.
8. *பற்பல பாஷைகளைப் பேசுதல்* - நடபடிகள் 2ல், ஒருவர் தாம் கற்றிராத மற்றும் அறிந்திருப்பதாக எதிர்பார்க்கப்பட்டிராத ஒரு மொழியில் பேசும் திறன் என்பதாக உள்ளது.
9. *பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல்* - வேறொருவரால் பேசப்பட்ட மொழியை விளக்கி உரைப்பதற்குப் பெற்றுக்கொண்ட அற்புத திறன், இதில் விளக்கம் அளிப்பவர் தாம் விளக்கம் அளிக்கும் மொழியை இயல்பாக அறிந்திருக்க மாட்டார் என்ற கருத்து மறைமுகமாக உள்ளது.

இத்துடன் கூடுதலாக, 12:28ல் ஆவிக்குரிய எட்டு வரங்கள் அல்லது பணிகள் பட்டியல் இடப்பட்டுள்ளன:

1. *அப்போஸ்தலர்கள்* - இது அனேகமாக, தோற்றகால பன்னிருவர் அத்துடன் கூடுதலாக பல வரங்களைப் பெற்றிருந்து தொடக்ககால சபையில் விசேஷித்த பணிப்பொறுப்பைச் செயல்படுத்திய பவுல் ஆகியோராக இருக்கலாம்.
2. *தீர்க்கதரிசிகள்* - தேவனிடத்தில் இருந்து பேசியவர்கள்; 1 கொரிந்தியர் 14:22ன் படி, விசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தையை எடுத்துரைப்பதே அவர்களின் விசேஷித்த பணிப்பொறுப்பாக இருந்தது.
3. *போதகர்கள்* - ''அறிவுறுத்துதலைக் கொடுக்கும் வரம்,''[7] விசேஷமாக சபைக்குப் போதிக்கும் வரம் (காண்க எபேசியர் 4:11; யாக்கோபு 3:1).
4. *அற்புதங்கள்* (''வல்லமையான செயல்கள்''; NRSV) - ''*அற்புதங்கள்* நிகழ்த்தும் வல்லமை'' (12:10; NLT).
5. *குணமாக்கும் வரங்கள்* - மக்களை அற்புத விதமாகக் குணமாக்கும் வல்லமை.
6. *ஊழியங்கள்* - ''தேவையில் இருப்பவர்களுக்கு உதவும் பொதுவான பணி'';[8] ''ஏழைகள், அனாதைகள், விதவைகள் மற்றும் அந்நியர் ஆகியோருக்கு உற்ற வேளையில் உதவுதல் என்பதைக் கடமையாகக் கொண்ட மக்கள்.''[9] இது ரோமர் 12:7ல் ஊழிய வரம் என்பதற்கு ஒத்ததாக உள்ளது என்பது நிச்சயம்.
7. *ஆளுகைகள்* (''நடத்துவத்தின் வடிவங்கள்''; NRSV) - ''நடத்துதலை'' செய்பவர் கொண்டிருக்க வேண்டிய திறன் (''ஆளுகைகள்''; ரோமர் 12:8; WEB). தனித்தனி சபைக்குழுமங்களை நடத்திய மூப்பர்கள் இந்த வரத்தைக் கொண்டிருந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை.
8. *மொழிகளில் பேசுதல்* - மொழிகளை கற்றுக் கொள்ளாமலேயே அவற்றில் பேசுதல் அல்லது அவற்றில் விளக்கம் அளித்தல்.

*இந்தப் பட்டியலில் பவுல் பின்வருபவற்றை வலியுறுத்தினார்: (1) வரங்களின் தோற்றுவாய், இவையாவும் தேவனிடத்தில் இருந்து வந்தன; (2) வரங்களின் பரவலான பல்வகைத்தன்மை; மற்றும் (3) வரங்களில் சிலவற்றின் சார்பளவு முக்கியத்துவம் - அல்லது குறைந்த பட்சம், மொழிகளில் பேசுதல் என்ற வரத்தின் முக்கியமற்ற தன்மை.*

---

*குறிப்புகள்:*

[1]Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 178. [2]W. Harold Mare, "1 Corinthians," in Frank E. Gaebelein, ed., *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 262. [3]Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 296. [4]*"குணமாக்குதல்கள்" என்பது மூலத்தில் பன்மையில் இருப்பதால், "பல்வேறு வகையான வியாதிகள் மற்றும் நோய்களைக் குணமாக்குதல்கள் இருந்தன" என்று பவுல் அர்த்தப்படுத்தி இருக்கலாம்.* (Morris, 171.) [5]*"அற்புதங்கள்"* (*dunameoēn*)*, என்ற வார்த்தை* (*dunamis*, *"வல்லமை"; காண்க ரோமர் 1:16*) *என்பதுடன் தொடர்புடையதாக உள்ளது.* [6]Morris, 171-72. [7]R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's First and Second Epistles to the Corinthians* (N.p.: Lutheran Book Concern, 1937; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1963), 539. [8]Morris, 179. [9]William Barclay, *The Letters to the Corinthians,* The Daily Study Bible, 2d ed. (Edinburgh: St. Andrews Press, 1954; reprint, Philadelphia: Westminster Press, 1956), 129.